
# பஜனை பாமாலை




**வெளியீடு :**

நாகசக்தி கலை மன்றம்,
நாகசக்தி இந்து இளைஞர் மன்றம்,
முனைக்காடு.
2016

**மகேந்திரன் கேதீஸ்வரன் (கலைமானி)**

# பஜனை பாமாலை



**வெளியீடு :**

நாகசக்தி கலை மன்றம்,
நாகசக்தி இந்து இளைஞர் மன்றம்,
முனைக்காடு.
2016.

**மகேந்திரன் கேதீஸ்வரன் (கலைமாணி)**

சிவமயம்

# ஆசியுரை

"உணர்வுகளின் வெளிப்பாடு உள்ளத்தின் ஆதங்கம்" இது மனிதனை அலையவைக்கும், ஆட்டிப்படைக்கும், நிதானமான உயர்ந்த, அஞ்ஞானமற்ற, உணர்வூற்றுக்கள் மனிதனுக்கு தோன்றுமானால் அவைகளால் மனம் லயப்பட்டு இறைவனை அடையும் வழியை மனம் தானாக தேடும் அத்தேடுதலால் அடைவதற்கரிதான கடவுளின் அடிச்சுவட்டை நாடி அதன்பால் ஈர்க்கப்பட்டு அவனேகதி என்று ஆண்டவனிடமே எங்களை இட்டுச் சென்று விடுவோம். இதனால் எங்கள் மனதுகளில் அன்பும் கருணையும் தோன்றி அவன் நாமத்தை பாட அவனருளாலே அருள் கிட்டும்

இப்படித் தோன்றுகின்ற அருட்பாக்களால் உள்ளம் தூய்மைபெறும் உணர்வுகள் மாறும் அஞ்ஞானம் அகலும் உடம்பில் நோய் அணுகாது உருவும், திருவும் ஒன்றாக சேரும். இவ்வாறான அருட்பாக்கள் அதிகமிருப்பினும் இன்றைய இளம் சமூகத்திற்கு தேவை, கூட்டுவழிபாடாகிய பஜனைப்பாடல்கள் இது மனதை தூய்மைபடுத்தி புதிய உத்வேகத்தை எமக்கு தரும்.

எனவே இவ்வாறான பாடல்களை ஒன்று சேர்த்து தனது உள்ளத்தில் மிளிர்ந்த அருட்பாக்களையும் உலகுக்கு வெளிப்படுத்தி உன்னதமான நூலுருவாக்கி (பஜனை பாமாலை) என்ற பெயரில் எங்களது கவிதை வித்தகன் செல்வன் மகேந்திரன் கேதீஸ்வரன் அவர்கள் வெளிக்கொணர்ந்திருப்பது இசைக்கும் இவ்வுலகுக்கும் இவர் ஆற்றும் பெரும் பணியென நாம் கருதுவோம்.

இதை வெளியிட்டு வைக்கும் நாகலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலனசபையுடன் இணைந்து நாகசக்தி கலைமன்றம், கலைக்கு ஆற்றுகின்ற பணி சிறக்கவும் கவிபுனைந்தவர் மனம் மகிழவும் மென்மேலும் கலைப்பணி தடையின்றி தொடரவும் எல்லாம் வல்ல நாகலிங்கேஸ்வரப் பெருமானுடைய திருக்கருணை வேண்டி என்னுடைய மனப்பூர்வமான ஆசியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"வாழ்க கலைப் பணி வானுலகுள்ளவரை"

இவ்வண்ணம்
சிவஸ்ரீ.ப.மானாகப்போடி ஐயா,
ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயம்,
முனைக்காடு.

# வாழ்த்துரை

ஈழத்தில் கிழக்கின் பொக்கிஷமான கேதீசின் பேச்சில், எழுத்தில், சிந்தனையில் சனாதன தர்மமே இழையோடி நிற்கும் அருள்தாகம் கொண்ட அன்பர் கேதீஸ் தமிழைத் தன் வயப்படுத்தி கவிதை செய்யும் நற்கவிஞர். இவரது கூத்துப்பாடல்கள் ஜனரஞ்சிதமாகவே இருக்கும். இவர் பல வடமோடி. தென்மோடிக் கூத்துப்பிரதிகளை ஆக்கம் செய்ததோடு மட்டுமன்றி அவற்றில் பாத்திரமேற்று நடித்து 2016ம் ஆண்டின் கிழக்குமாகாண இலக்கிய விழாப்போட்டி வடமோடிக்கூத்தில் "அபிமன்யூ" பாத்திரமேற்று சிறப்பாக ஆடிப்பாடி நடித்தமைக்கான சிறந்த நடிகர் எனும் விருதைப்பெற்றமை ஈன்று குறிப்பிடத்தக்கது. இந்த ஆற்றல்கள் இவருக்குக் கிடைத்த ஒருவரம் என்றே குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சித்திருக்கெல்லாம் சித்தரான திருமூலர் அவர் வழிவந்த பட்டினத்தார்,தேவாரத் திரிமூர்த்திகளான திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார், திருவாசகத்தேன் தந்த மணிவாசகர், பாமரக் கவிஞர் பாரதி, ஆசிய ஜோதி தந்த தேசிகவிநாயகம் பிள்ளை என்று இவர்களையெல்லாம் கேதீசின் "பஜனைப்பாமாலை" யில் காணமுடிகின்றது. தான் எடுத்துக்கொண்ட கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு உகந்த யாப்புவடிவங்களைத் தேர்தெடுத்து வெண்பா, பல வித வடிவங்கள் கொண்ட விருத்தப்பாக்கள் எனப் பாமாலைப் பாவினங்களால் மணம் பரப்பி நிற்பது கண்டு களிபேரு வகைகொண்டு இவர்

கவித்துவத்தின் பட்டொளிபிரகாசித்து நிற்பதைக் கண்டு படிப்பவர்கள் பூரித்துப் போவார்கள் என்பது திண்ணமாகும்.

"கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்ற நம்பி வாழும் இந்த நவநாகரீக காலத்தில் எது காணவேண்டியது? எது உண்மையான காட்சி? என்று யாவரும் அறியும் வண்ணம் அன்பர் கேதீஸ் தன் கவித்துவத்தால் பக்தி மணம் கமழும் வண்ணம் எங்களுக்குப் "பஜனைப் பாமாலை" ஒன்றை ஆக்கித் தந்துள்ளார். இந்தமாலை வளம் தரும் மாலை, வாடாமாலை, விண்ணவரும் மண்ணவரும் விரும்பிடும்

மாலை, சொல்நயம் பொருள்நயமும் செறிந்து நிற்கும் மாலை, விநாயகர், சிவன், சக்தி, முருகன்,விஷ்ணு, நாகலிங்கேஸ்வரர் போன்ற தெய்வ முகுர்த்தங்களின் சிறப்புக்களைச் சுந்தரத் தமிழினில் சுவை பயக்கும் மாலை இப்பாமாலையிலுள்ள மலர்களை சைவம், தமிழ் எனும் இருமென் நார்களாற் தொடுத்து இராகம், தாளம், பாவம் எனும் நறுமணங்கமழச் செய்துள்ளமை பாராட்டுக்குரிய அம்சங்களாகும்.

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக் கவலை மாற்றல் அரிது" எனும் பொய்யா மொழி வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப மனக்கவலை போக்கும் மாற்றும் மாமருந்தாக, இந்து மதத்தின் இறுதி இலட்சியமான வீடுபேற்றின்பம் அளிக்கும் ஔடதமாக பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி தன்னுடைய சிந்தனைத் திறனை வைரத்தை தங்கத்திலே பதித்து

அழகுறச் செய்தது போல பஜனைப் பாமாலை ஆக்கி எமக்கெல்லாம் அளித்துள்ள கேதீசை என்றும் இந்து மதம் மறவாது வாழ்த்தும்

வேழமுகனுக்கு தும்பிக்கரம்மழகு
வேலனுக்கோ கைவேல் அழகு
அத்தனான சுயம்புலிங்கனுக்குக் காலழ்கு
அன்னை ஆதி பராசக்திக்கு விழியழகு
திரு மாலுக்கோ திருமுகமழகு
அருளாள கேதீசின் தமிழோ மிகவழகு
விநாயகனைக் கண்டேன்
மலைநாயகனைக் கண்டேன்
மங்கை மாதுமையைக் கண்டேன்
மயில்வாகனனைக் கண்டேன்
பச்சைமால் வண்ணனைக்கண்டேன்
நாகலிங்கேஸ்வரரைக் கண்டேன்
அத்தனை தெய்வங்களும் அருளும் பாமாலை
ஆனந்தத் தமிழ்தோய்ந்த அழகுப் பாமாலை
கோவில்கள் உருவான வரலாறு கருவாகி
பாவாகி பரிணமித்து புகழ்பாடும் சில கவிகள்
கிழக்கீழ மண்ணின் கொஞ்சும் தமிழாலே
தேனாகித் தித்தித்து செவியேறும் சில கவிகள்
தெய்வங்கள் புகழ்பாடும் பஜனையாலிசைபாடும்
நெஞ்சமெல்லாம் பக்திக் கடலாகும் திருவிழிகள்

ம.கேதீஸ்வரன் (BA)

அத்தனையும் அமுதம் மன மோகன நாதம்
சித்திக்க சிந்தையிலே லயிக்கும் ஞானம்
சொல்லோடு சொல்சேர்ந்தாற் கவியுமல்ல
சொல்லுக்கு உயிர் கொடுத்தல் சுலபமல்ல
உள்ளத்தே யிறையிருந்து தமிழாய்ப் பிறந்து வந்து

கள்ள மறப் பஜனைப் பாமாலையான திங்கே
அள்ளவள்ளக் குறையாத தமிழாலே இசைதந்த
வெள்ளைமனக் கேதீஸ் வாழ்க! தமிழ்பாடி

கவிஞர் கேதீஸ் இறையருளால் தமது தெய்வீகப் பணியில் மென்மேலும் உயர்ந்து சிறக்க மனமார வாழ்த்தி பல்லாண்டு நலம் வாழ இறையருள் கிட்ட வேண்டுமென வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன் வளர்க தமிழ்! வாழ்க இந்து நெறி

**ஆரையூர் அருள்,**
**செம்மொழிப் புலவர்,**
**ஆரையம்பதி.**

# வாழ்த்துரை

முனைக்காடு எனும் பழம்பெரும் கிராமத்தில் வசித்துவரும் செல்வன் மகேந்திரன் கேதீஸ்வரன் அவர்களின் “பக்தி பஜனை பாமாலை” எனும் நூல் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் நாடகங்கள் கூத்துக்கள் போன்றவற்றில் மிகவும் பரீட்சையம் உடையவராகவும், அக்கலைகளை இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் பழக்குவதில் தொடர்ச்சியான பணியாற்றுகையும் உடையவராவார். அத்தோடு இந்து ஆலயங்களில் இடம் பெறும் பஜனை வழிபாடுகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் கலந்து கொண்டு மேளதாள வாத்தியங்களை இசைப்பதில் கைதேந்தவராவார். இவரினால் வெளியிடப்படும் பஜனைப் பாமாலை எனும் நூலானது காலத்தின் தேவைகருதி வெளியிடப்படும் ஒரு நூலாகும். தற்கால இயந்திரமயமான சமூக நீரோட்டத்தில் ஆன்மிக சிந்தனைகளை வளர்க்கவும், பக்திமயமான பஜனை வழிபாட்டிற்கும் உறுதுணையாக அமையும் என்பது திண்ணம் இந்த இளைஞரின் ஆக்கங்களை வெளிக்கொணரும் முறையானது இளம் இளைஞர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களின் சமயஈடுபாட்டை வளர்ப்பதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலை சமய வளர்ச்சியின் ஒரு படிக்கல்லாக அமைந்துள்ளது.

இவரின் ஆக்கமும் ஊக்கமும் மென்மேலும் சிறப்புடன் வளர எல்லாம் வல்ல இறைவனை பிராத்தித்து வாழ்துவதில் மனநிறைவடைகின்றேன்.

**அ. அருள்ராசசிங்கம்,**
**ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்,**
**முனைக்காடு.**

## முன்னுரை

# "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

இந்துப் பண்பாட்டை பொறுத்தமட்டில் சங்ககாலத்துக்கும் முன்பிருந்து இன்றுவரை எத்தனையோ அருட்பாட்கள் தமிழ் மொழி கொண்டு இந்துமா சமூத்திரத்தோடு இணைந்து விட்டன. அவை அனைத்தும் மானுடவாழ்வின் ஈடேற்றத்துக்காக எமது மூதாதைகளால் அருளப்பட்ட பக்தி சுவை மிக்க முக்திக்கான வழியாகும்.

"பக்தி கொண்டால் முக்தி கிட்டும்" இந்த யுகத்தில் பக்தியால்தான் முக்தி என்பது தத்துவம். இறைவனை அடைவதற்கான மார்க்கத்தில் பக்தி மார்க்கம் முதன்மை பெறுகிறது. ஆகவே பக்தர்கள் பக்தியினை வெளிப்படுத்த பல வழிகளிலும் முயல்கின்றனர். அதிலொன்று பஜனை கூட்டு வழிபாடு இது ஆலயங்கள் தோறும் வார வெள்ளிக்கிழமை விஷேட பூசை வழிபாட்டின் போது பஜனை பாடி பரவசப்படுவர்.

நானும் சிறுவயதிலிருந்து பஜனை வழிபாட்டில் ஈடுபட்டுவந்தமையால் புதிய பாடல்களை அமைத்து பஜனை பாடவேண்டும் என்னும் எண்ணம் தோன்றியது அதனடிப்படையில் எனக்குள் எழுந்த இறைபுகழ்களையும் என்னிடம் கிடைக்கப்பெற்ற சில அருட்பாட்களுக்கு மெட்டு அமைத்தும், முன்பு அமையப்பெற்ற ஒரு சில அருட்பாட்களை மெருகூட்டியும், என்னால் இயன்றளவு இந்த பஜனை பாமாலையினை அமைத்துள்ளேன்.

இந்த பாமாலையினை வெளியிடுவதற்கு எனக்கு ஊக்கமூட்டிய நல் உள்ளங்களுக்கும், ஆசியுரை, வாழ்த்துரை வழங்கியவர்களும், புத்தகத்தினை வடிவமைத்து தந்த உள்ளங்களுக்கும் நன்றி நல்கியவனாக அடியேனின் இந்த கன்னிமுயற்சிக்கு ஆசிவேண்டி பிழைபொறுத்தருள வேண்டுமென உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திரு.ம.கேதீஸ்வரன்,
முனைக்காடு.

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| விநாயகர் துணை | 01 |
| விநாயகர் பாடல்கள் | 02 |
| கணபதியே கஜமுகனே | 03 |
| பிள்ளையார் பிள்ளையார் | 04 |
| பாஹிபாஹி கஜானான | 05 |
| வினைதீர்க்கும் நாயகா | 06 |
| கணபதி ஓம் | 07 |
| நாகலிங்கேஸ்வரர் பாமாலை | 08 |
| ஸ்ரீ நாகதேவா | 09 |
| சரணம் சரணம் | 10 |
| தாயே நாகவள்ளி | 11 |
| சிவன் பாடல்கள் | 13 |
| லிங்க மகாதேவா | 14 |
| ஜெயஜெய | 15 |
| சிவசிவ | 16 |
| ஜெய ஜெய சங்கர் | 17 |
| சக்தி பாடல்கள் | 18 |
| மாதா பராசக்தி | 19 |
| உலகமெல்லாம் சக்தி | 20 |
| துர்க்கா லக்க்சுமி | 21 |
| முருகன் பாடல்கள் | 22 |
| செங்கமத்திருப்பாதம் | 23 |
| சரவணபவகுக | 24 |
| ஓங்கார ரூபனையா | 25 |
| வரம்தரவேண்டும் | 26 |
| குன்றாறும் குடி | 27 |
| கண்ணன் பாடல்கள் | 28 |
| ஜெயஜெய ராம்ராம் | 29 |
| கண்ணா கண்ணா | 30 |
| கண்ணா கோபாலா | 31 |
| மங்களம் | 32 |

# விநாயகர் துணை

ஆதிமூலப் பொருள் அண்டசராசரம்
ஆன முதற் பொருள்
நாதவடிவே ஆனை முகனே
நின் தாழ் பணிந்தோம்
தொழுதோம் சரணம்

திருச்சிற்றம்பலம்

மாதர் பிறைக் கன்னியானை
மலையான் மகளோடும் பாடி
போதோடு நீர் சுமந்தேத்தி
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயாரடைகின்ற போது
காதன் மடப்பிடியோடு
களிறு வருவனக் கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாரனெக் கண்டேன்.

திருச்சிற்றம்பலம்

# விநாயகர்

# பாடல்கள்



பஜனை பாமாலைகள்

ம.கேதீஸ்வரன் (BA)

## 01

## கணபதியே கஜமுகனே...

கணபதியே கஜமுகனே கற்பகமே காப்பு
குணநிதியே ஆறுமுகன் சோதரனே காப்பு

ஐங்கரனே அருள்மழையே ஆரமுதே காப்பு
சிவசக்தி திருக்குமரா சித்தமுன் மேல் காப்பு

திருமாலின் திருமருகா சத்தியமே காப்பு
திக்கற்றோர் துணை நிற்கும் விக்கினனே காப்பு

ஒற்றை மருப்போனே உன்மீது காப்பு
வெற்றி புனைந்த விழியோனே காப்பு

முருகனுக்கு முன்பிறந்த முதல்வனே காப்பு
முத்தமிழும் தந்தருளும் மூசிகனே காப்பு

ஓங்காரத் தனிவுருவே ஓலமுன் மேல் காப்பு
நீங்காக் கருணை மழையோனே காப்பு

துறவர் தமக்கொரு துணைவோனே காப்பு
முறநிகழ் தழை செவி முதல்வோனே காப்பு

## பிள்ளையார் பிள்ளையார்...

பிள்ளையார் பிள்ளையார் பிள்ளையார் பிள்ளையார்........

உமை சிவ பாலன் உண்மையின் தேவன்
உறுதியாய் எங்கும் உறைந்திடும் நாதன்
உள்ளம் நிறைந்தவன் .....

பிள்ளையார் பிள்ளையார்............

யானையின் முகம் உடையவன் தேவன்
ஐந்து கரங்கள் கொண்டவன் நாதன்
மூசிக வாகனன்.......

பிள்ளையார் பிள்ளையார்............

ஏழையின் தோழன் எளிமையின் சீலன்
ஏகதந்தம் உடையவன் நாதன்
பொறுமையின் அரசன்.....

பிள்ளையார் பிள்ளையார்............

தாய் தந்தை தன்னை உலகமாய் எண்ணி
ஒரு நொடி தன்னில் வலமது வந்து
மாங்கனி பெற்றவன்.......

பிள்ளையார் பிள்ளையார்............

காக்கையின் ரூபம் எடுத்தவன் தேவன்
காவேரி தன்னை கவிழ்த்தவன் நாதன்
உலகைக் காத்தவன்..........

பிள்ளையார் பிள்ளையார்............

தேவாதி தேவர் போற்றிடும் தேவன்
ஈசனும் கூட வணங்கிய நாதன்
முன்முதல் நாயகன்.....

பிள்ளையார் பிள்ளையார்............

# 03

## பாஹி பாஹி கஜானனா...

பாஹி பாஹி கஜானனா பார்வதி நந்தா கஜானனா
மூசிகவாகன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமர கருணா கஜானனா விளம்பித ஜித்திரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மகேஸ்வர புத்திரா கஜானனா

பாஹி பாஹி கஜானனா..........

ஐந்து கரத்தோன் கஜானனா
ஆனை முகத்தோன் கஜானனா
ஒற்றை மருப்போன் கஜானனா
ஓங்கிய கரிமுக கஜானனா
ஞயமுடை வித்தக கஜானனா
இடமுடை விக்கின கஜானனா
அன்புடைக் கடவுள் கஜானனா
ஆபத்தகற்றும் கஜானனா

பாஹி பாஹி கஜானனா..........

ஔவியமில்லா கஜானனா
தத்துவ முறைதரு கஜானனா
நன்நெறி வித்தககஜானனா
அரவக் கிண்கிணி கஜானனா
இலகக் கொம்போன் கஜானனா
வஞ்சக பழவினை கஜானனா
காமன் பகைவா கஜானனா
கீழ்மை யொழித்தோன் கஜானனா

பாஹி பாஹி கஜானனா..........

கேதாரப் பிரிய கஜானனா
கோலக் குடநிகர் கஜானனா
கொவ்வைக் கனிவாய் கஜானனா
கௌவைப் பழவினை கஜானனா

ஜெய ஜெய கணபதி கஜானனா
சூரிய முகத்தோன் கஜானனா
விக்கின விநாயக கஜானனா
பாத நமஷ்தே கஜானனா

பாஹி பாஹி கஜானனா..........

# வினை தீர்க்கும் நாயகா...

வினை தீர்க்கும் நாயகா வேண்டுகிறோம் நாயகா.......
அன்பு காட்டி எங்களை ஆதரிக்கணும் ஆண்டவா....

கணநாயகா எங்கள் கணநாயகா
கணங்களின் நாயகனே கணநாயகா

துணை நீயையா சுவாமி துணை நீயையா
துணையாக நீ வரணும் கணநாயகா

சிவபாலகா எங்கள் சிவ பாலகா
சித்தி மிக தந்தருளும் சிவபாலகா

புவி நாயகா எங்கள் புவிநாயகா
புத்தி மிக தந்தருளும் புவிநாயகா

வரம் தா ஐயா எமக்கு வரம் தா ஐயா
மனத்துயர் தீர்த்து நீயும் வரம் தா ஐயா

## 05

## கணபதி ஓம்...

கணபதி ஓம் ஜெ கணபதி ஓம்
கஜமுக ஐங்கர கணபதி ஓம்
குணபதியாம் சிவ கணபதி ஓம்
குண்டலினீ மண்டல கணபதி ஓம்

மூசிக வாகன கணபதி ஓம்
மூலக் வாபண கணபதி ஓம்
மாசுர தேசிக கணபதி ஓம்
வல்லப மோகன கணபதி ஓம்

விக்கின விநாயக கணபதி ஓம்
விகீசித நாகமுக கணபதி ஓம்
உத்தர தாபோபல கணபதி ஓம்
உத்துவ நாதன கணபதி ஓம்

பார்வதி பாரதி கணபதி ஓம்
பரம சிவஞான கணபதி ஓம்
பூர்ண விராதர கணபதி ஓம்
பூர்ண புரந்தர கணபதி ஓம்

சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நெத்திய தத்துவ கணபதி ஓம்
நிர்மல சிந்திய கணபதி ஓம்

# நாகலிங்கேஸ்வரர்

# பாமாலை



ம.கேதீஸ்வரன் (BA)

பஜனை பாமாலைகள்

# 01

## ஸ்ரீ நாகதேவா...

ஸ்ரீ நாகதேவா எங்கள் நாகலிங்கமே
நாடிவந்தோமே ஐயா நலமளிப்பாயே

பாதம் போற்றினோம் ஐயா பக்தர் நாங்களும்
பால்பழம் வைத்தோம் எங்கள் பாவத்துயர் தீர்ப்பாய்

கருணைக் கடலொளியே எங்கள் கண்கண்ட தேவா
கலியுகவரதா உந்தன் கழலடி தொழுதோமே

மாகிமகமாரி தாயின் மணிமுடிதன்னில்
மகிழ் வாய் உறைகின்ற உந்தன் மகிமை கண்டோமே

தேசத்தோர் வந்து ஐயா பொங்கல் கொண்டோமே
தோசத்துயர் தீர என்றும் அருள்வாய் ஐயனே

அன்பு அறமெங்கும் இந்த அகிலம் தனிலோங்க
அரவத்திருவே என் ஐயா அருள்வாயே

ஆன்மீக நெறிகள் இந்த தரணி தனிலோங்க
ஆதிசேசனாய் அமர்ந்த ஆதியே காப்பாய்

கருவறை தனிலுன் ஐயா காட்சி நாம்கண்டு
காதலாகியே ஐயா கண்ணீர் மல்கினோம்

முக்கண்ணன் மேனி அங்கம் தன்னையே ஆளும்
முனையூர் மேவிய எங்கள் முதல்வோனே போற்றி

## சரணம் சரணம் சரணம்...

சரணம் சரணம் சரணம்
சரணம் எங்கள் நாகேஸ்வரா
சரணம் நாகலிங்கேஸ்வரா

உலகைத் தாங்கும் உயிரே....
உன்னை மறவோம் திருவே...
அரவத்திருவே வருவாய்
அறிவின் அமுதம் தருவாய்
அரனார் தனையே னையும்
அரியின் அணையே வருவாய்
அமுதம் அளித்த அருளே
ஆதி சேஷத் திருவே
தரணி ஆளும் தலைவா
ராகு கேது முதல்வா
பாலும் பழமும் அருள
பாவ வினைகள் அறுப்பாய்
தேசம் கூடிப் புகழ்ந்தோம்
தோசத் துயரைத் தீர்ப்பாய்
முனையூர் புகழும் முத்தே
முடிவில்லாத முதல்வா.............

# 03

## தாயே நாகவல்லி...

தாயே நாகவல்லி வந்தனம்
எங்கள் நாகலிங்கேஸ்வரா வந்தனம்
முனைஊரில் குடிகொண்டாய் வந்தனம்
எங்கள் கண்கண்ட தெய்வமே வந்தனம்

வந்தனம் வந்தனம் நாகலிங்கேஸ்வரா
வந்தனம் வந்தனம் நாகலிங்கேஸ்வரா

பாற்கடல் கடைந்ததால் துடித்தாய்
ஒரு எரிமலை போலங்கே வெடித்தாய்
கொடிய விஷம் தன்னை விடுத்து உந்தன் மாற்றற்ற
கோபத்தை தெளித்தாய்

மண்ணெல்லாம் நஞ்சாக
மறையெல்லாம் நோயாக
பிடிவாதம் பிடித்தாயே நீதானே ஜெய்த்தாயே

தேவர்கள் அச்சத்தால் பயந்து அந்த ஈசனின்
பாதத்தில் வீழ்ந்தார்
உன்மனம் அறிந்த பரமன் உந்தன் அமைதிக்கு வழியை
வகுத்தார்

கோமாதா யாகத்தால்
குளீர்ந்ததே உன் கோபம்
நஞ்செல்லாம் அமுதமாய்
மலர்ந்ததே அங்குதான்

முனையூரில் குடி கொண்ட ஈசனே
நீமறவாமல் காத்திடு எம்மையே
கோபங்கள் எமக்குள்ளே வேண்டாமே
ஒரு கொடுஞ்சொல்லும் எமக்குள்ளே வேண்டாமே

ஆசைகள் அதிகம் வேண்டாமே
எந்தன் எண்ணத்தில் தடுமாற்றம் வேண்டாமே
பாசத்தில் குறைகள் வேண்டாமே
எந்தன் பண்பினில் கறைகள் வேண்டாமே

உறவினில் பகைகள் வேண்டாமே
எந்தன் உள்ளத்தில் பொறாமைகள் வேண்டாமே
பாவத்தில் வழிகள் வேண்டாமே
எந்தன் தேகத்தில் பிணிகள் வேண்டாமே

தீயவர் நட்புகள் வேண்டாமே
எந்தன் தீர்வினில் தவறுகள் வேண்டாமே
பொய்யான புன்னகை வேண்டாமே
தினம் பொய்காட்டும் மோகமும் வேண்டாமே

அச்சங்கள் மனதில் வேண்டாமே
ஒரு ஆபத்தும் நெருங்க வேண்டாமே
இச்சைகள் பெருக வேண்டாமே
எம்மை இம்சைகள் நெருங்க வேண்டாமே

தீவினை நெருங்க வேண்டாமே
இந்த போர்க்களம் எமக்கு வேண்டாமே
மானிட தாழ்வுகள் வேண்டாமே
இந்த மண்ணினில் வன்முறை வேண்டாமே

# சிவன்

# பாடல்கள்



பஜனை பாமாலைகள்

ம.கேதீஸ்வரன் (BA)

# 01

## லிங்க மகா தேவா...

லிங்க மகா தேவா சிவ லிங்க மகாதேவா
நிருதம சுந்தரரே சிவ தீரத தலநயனா
விபூதி சுந்தரரே சிவ பாத மகேஸ்வரரே

லிங்க மகா தேவா............

திரிபுர சுந்தரரே திரி சூல தாரியரே
இளம் பிறை ஒளி சுடரே சடைகங்கா தாரியரே

லிங்க மகா தேவா............

சிவசிவ சபாபதே சிவகாமி உமாபதே
அரகர மறையோனே அருணாசல அரகரனே

லிங்க மகா தேவா............

காலனை வென்றவரே கதிரொளி மேனியனே
திருநட சுந்தரரே திருவிழி மினலோனே

லிங்க மகா தேவா...,.........

# 02

## ஜெய ஜெய கான...

ஜெய ஜெய கான மோனசபா
சச்சி தானந்த ஞானசபா

பணியணி நாதா பரமதயா
பங்கய பாதா பசுவாகனா

மலை மகள் பங்கா மறை முதல்வா
மதி தவள் சடையா எமதிறைவா

அலைநிறை கங்கா நதிமுடிவா
ஆறுமுகன் அப்பா அருளுபவா

பிரணவ ரூபா பிறை நுதலா
பிரே மானந்தா பெருந்தலைவா

சிதம்பர தேவா சிவாய நமா
திருநீற் றொளியில் திகளுபவா

## 03

# சிவ சிவ...

சிவ சிவ சிவ சிவ சிவாய நமக
சிவ சிவ சிவ சிவ சிவாய நமக

ஆதியும் அந்தமும் அற்ற என் லிங்கம்
அதி சிவனார் உறைகின்ற லிங்கம்

சிவ சிவ சிவ சிவ .........

அருவமும் உருவமும் அற்ற என் லிங்கம்
அரும் பெருஞ் சோதி உறைகின்ற லிங்கம்

சிவ சிவ சிவ சிவ .......

அண்ணாமலையார் உள்ள என் லிங்கம்
அருணாயலனார் உறைகின்ற லிங்கம்

சிவ சிவ சிவ சிவ .......

யமனவன் அகந்தை அடக்கிய லிங்கம்
யாரும் வணங்கும் அரும்பெரும் லிங்கம்

சிவ சிவ சிவ சிவ .......

முப்புரம் தன்னை எரித்த என் லிங்கம்
முக்கண்ணுடைய முற்புத லிங்கம்

சிவ சிவ சிவ சிவ .......

ராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவலிங்கம்

சிவ சிவ சிவ சிவ .......

04

## ஜெய ஜெய சங்கர...

ஜெய ஜெய சங்கர ஓம் ஓம் ஓம்
ஓம் சிவ சங்கர ஓம்
ஓம் சிவ சங்கர ஓம் சிவ சங்கர
ஓம் சிவ சங்கர ஓம்
ஓம் ஜெய ஓம் சிவ சங்கர ஓம்

சிவ சிவ சிவநாதா ஓம் ஓம் ஓம் சிவ
குருநாதா
ஓம் ஜெய ஓம் ஓம் ஓம் சிவ ஓம் ஓம்
ஓம் சிவ குருநாதா
ஓம் ஜெய ஓம் சிவ குருநாதா

அண்ணாமலை நாதா ஓம் ஓம்
அருணாசல சீலா
அரகர சிவ ஓம் அரகர சிவ ஓம்
அரகர சிவநாதா
ஓம் ஜெய ஓம் சிவ குருநாதா

நதி முடி நாகேஷா ஓம் ஓம்
திருநந்தி கொடி நாதா
ஓம் ஜெய சங்கர ஓம் சிவ சங்கர
ஓம் சிவ சங்கர ஓம்
ஓம் ஜெய ஓம் சிவ சங்கர ஓம்

# சக்தி

# பாடல்கள்



# 01

## மாதா பராசக்தி

மாதா பராசக்தி வையமெல்லாம் நீநிறைந்தாய்
ஆதாரம் உனையெல்லால் ஆரெமக்குப் பாரினிலே ஏதாயினும்
வழி நீ சொல்வாய் எமதுயிரே
வேதாவின் தாயே மகிப்பணிந்து வாழ்வாமே

மாதா பராசக்தி ..........

வாணி கலைத் தெய்வம் மணிவாக்கு உதவிடுவாள்
ஆணி முத்தைப்போல அறிவுமுத்து மலையினால் காணுகின்ற
காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய் மானுயர்ந்து
நிற்பாள் மலரடியை சூழ்வோமே

மாதா பராசக்தி ..........

பொன்ரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னு நவரத்தினம் போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதாரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னருள் பெற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே.

மாதா பராசக்தி ..........

மலையினிலே தான்பிறந்தால் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல் தான் வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள் நேர அவள் பாதம்
தலையிலே தாங்கி தரணிசைந்து வாழ்வோமே

மாதா பராசக்தி ..........

## 02

## உலகமெல்லாம் சக்தி...

உலகமெல்லாம் சக்தி புகழ் ஓங்க வேண்டும்
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்

கல்விச் செல்வம் என்று மிங்கே நிலைக்க வேண்டும்
கலைமகளின் திருநாமம் ஓங்க வேண்டும்

குறைவற்ற செல்வமெங்கும் பெருக வேண்டும்
திருமகளின் திருநாமம் சிறக்க வேண்டும்

வீர மிகு வல்லமைகள் சேரவேண்டும்
மலைமகளின் திருநாமம் மலரவேண்டும்

மகிடாசூர மர்த்தினியாய் நின்றதாயல்லோ
மகா சக்தி திருநாமம் வளரவேண்டும்

முப்பத்தி முக்கோடி தேவர்களெல்லாம்
போற்றி நிற்கும் சக்தி புகழ் ஒளிரவேண்டும்

## 03

## துர்க்கா லக்ஷ்மி...

துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதியின் பாதம் பணிவோம்
நவராத்திரி திருநாளை தினமும் போற்றுவோம்

கல்வி/செல்வம்/வீரம் எனும் மூன்றிலும் இருந்து
எமைக்காத்து அருள்புரியும் தெய்வம் நீயல்லோ

ஆயகலைகள் அறுபத்து நான்கிலுமிருந்து
எமையாண்டு அருள் புரியும் தெய்வம் நீயல்லோ

மும்மூர்த்தி தேவர்களின் மூர்க்கமடக்க
மூலப்பொருள் ஆகி நின்ற சக்தி நீயல்லோ

பலகோடி பலநாமம் கொண்ட தாயே
பக்தியெனும் சக்தி ஒளி நீதானே

மும்மூர்த்தி துணையாக நின்ற தாயே
மூவுலகம் போற்றி நிற்கும் தெய்வம் நீயே

# முருகன்

# பாடல்கள்



## 01

# செங்கமலத் திருப்பாதம்...

செங்கமலத் திருப்பாதம் பதிந்த இடம்
சீறிவந்த வேல் தரித்து நின்ற இடம்

சங்கடங்கள் தீர்த்தளும் புனித இடம்
சங்கரனார் திரு மகனார் உறையும் கோயில்

தென்கிழக்குத் திசையிலிருந்து அருளுமிடம்
தென்னாடு கொண்ட சிவன் மைந்தறிடம்

வலுதந்து துடிப்பேற்றும் திவ்விய இடம்
வாழ நல்ல வழிகாட்டும் குமரன் கோயில்

உமையவளின் இளமகனார் உறையுமிடம்
உத்தமர்கள் போற்றி நிற்கும் இனிய இடம்

இன்னல் களைந்து நலம் நல்குமிடம்
இறைவன் எம்திருமுருகன் உள்ள கோயில்

நல்லவர்கள் நாடிவந்து பணியுமிடம்
நலங்கள் பல தந்தெம்மைக்காக்குமிடம்

மறம் களைந்து அறம் நிலவி நிற்குமிடம்
மலர்ப்பாதம் கந்தவேல் அமர்ந்த கோவில்

மயிலமர்ந்து மதிதருவோன் உள்ள இடம்
மாநிலத்தில் கருணையொளி பாயுமிடம்

விண்ணவரும் போற்றி நிற்கும் புனித இடம்
வீர வேல் கொண்ட எங்கள் வேலன் கோயில்

மழுவரசன் திருப்பணிகள் செய்த இடம்
மாசகற்றும் வள்ளி மணவாளனிடம்

பண்டு முதல் நிலைத்திருந்து அருளுமிடம்
பழம் பெருமை பாராட்டும் திருக்கோயில்

## 02

## சரவண பவகுக...

சரவண பவகுக சண்முகத்தரசே
சரணம் சரணம் சரவண பவனே

ஆனாவமுதே அயில்வேல் அரசே
ஞானாகரனே நவிலத் தகுமோ
யானாகியேனை விழுங்கி வேறும்
தானாய் நிலைத்து நின்றாய் குகனே

நாதா குமரா நம வென்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள்
வேதா முதல் விண்ணவர்கள் சூடும்
பாதா குறமின்பத சேகரனே

உருவாய் அருவாய் உளதாய் இலதால்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உருவாய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குமரா

# 03

## ஓங்கார ரூபனையா......

ஓங்கார ரூபனையா ஒளிவடிவானவனே
சங்கர கரி மைந்தனே ஐங்கரன் சோதரனே

எங்களைக் காப்பவனே எங்கூரநாதனே
எங்களின் சங்கடங்கள் ஆழியில் எரியுதையா

ஏழையின் தோழனையா புண்ணியம் தந்தோனையா
ஞான ஒளி மழையே பாவமொழிப்பவனே
கண்கண்ட தெய்வமையா கருணைக்கடலொளியே

சாதி ஒருமையுடன் நினைக்கின்ற உத்தமரை
ஆடிமன்றாடிவந்து பணிவோமடி மலரடியை
பாடிப்புகழ்ந்திடுவோம் வாவரின் தோழனையா

சுவாமி சரணம் என்று நாமசங்கீர்த்தனையா
உன்னடி சரணடைந்தோம் பூலோக பாலகனே
நிம்மதி நிலைநாட்டும் மன சிந்தனை குலைத்தெறியும்

நாடி வருவோர்க்கெல்லாம் குறைதீர்க்கும் ஐயப்பனே
துன்பங்கள் தூசாக்கும் தீயாக யொளிப்பவனே
உள்ளத்தில் அமந்திருப்பாய் எங்கள் உள்ளம் நிறைந்திருப்பாய்

சங்கடம் குறை செய்வாய் சந்தோசம் நிறையருள்வாய்
சாகேதன் மகனிவனே சர்வேஸ்வரா துணையே
அவனிப்பாலகனே மகிசியை வென்றவனே

கற்பூரப்பிரியனே நெய் அபிஷேகப் பிரியனே
நெய்யப்ப சுவாமி துணை திருவாவரணம்துணை
பொன்னம்பலத்தாண்டவனே துணை ஐய்யா வரமருள்வாய்

தேவாதி தேவகணம் பூசைகள் செய்யும் சுவாமி
மாமுனிகள் வணங்குமையன் மாமலைமேல் வாழும் சுவாமி
சத்திய சொரூபனையன் சுவாமி முக்தியைத் தருமையப்பன்

# 04

## வரம் தரவேண்டும்...

வரம் தரவேண்டும் வள்ளி மணவாளா
கெதி என வந்தோம் புள்ளிமயில் வேலா

ஆறுமுகமும் ஆறுபடை வீடும்
ஆறிரு கமல கண்களின் அழகும்

செந்திரு கமல பாதங்கள் இரண்டும்
சேவிக்கத் தூண்டும் உன் திருக்கோலம்

கண்கள் இரண்டும் கண்டிடத்தானே
காட்டிடுவாயே கதிர்வேலழகா

ஓங்காரத்தின் உட்பொருள் தன்னை
ஓதிக்காட்டி உயர்ந்தவன் நீயே

சேவற்கொடியோய் செங்கதிர் வேலா
சேவடி தொழுதோம் சேய் எமைக்காப்பாய்

# 05

## குன்றாறும் குடி....

குன்றாறும் குடி கொண்ட முருகா
ஈழக்கதிர்காமம் தனில் மேவும் எனையாளும் தலைவா

நின்றாடும் மயிலேறும் அழகா - பகை
வென்றாட வெற்றி வேல் கொண்டாயே குமரா

அன்றாடம் உனைப்பாடவேண்டும்
அன்பர் நெஞ்சிலே என்னாளும் நின்றாடுவாயே

தண்டாயுதம் கொண்ட தலைவா
இன்பத்தமிலோங்க எப்போதும் அருள்வாயே அரசே

ஓங்கார ஒளியான தேவா
சிவபரனுக்கு குருவான தேசிகா முருகா

சங்கத்தமிழ் தந்த தலைவா எங்கள்
சங்கடம் தீர்த்தருள் சங்கரன் மைந்தா

வற்றாத வளநாடு கண்டு - எழில்
மலைமேலே அமர்ந்தாயே வள்ளிமணவாளா

ஓராறு முகம் கொண்ட ஒளியே – என்றும்
ஈராறு கரம் கொண்டு இலங்குமென்திருவே

தீராத வினை தீர்க்கும் தெய்வம்
உன்னை ஒருபோதும் மறவாத வரம் வேண்டும் குமரா

# கண்ணன்

# பாடல்கள்



# 01

## ஜெய ஜெய ராம் ராம் ...

ஜெய ஜெய ராம் ராம் ஜெய ஸ்ரீராம் ராம்
சீத்தா ராம் ஸ்ரீ ஸ்ரீரங்க ராமா

புல்லாங்குழலில் கோகுல பாலன்
குமரிகள் கொஞ்சும் மன்மத கண்ணன்

பாரதக் கதையின் தலைவனாய் நின்று
பார்த்தனை காத்த பச்சைமால் வண்ணன்

லீலைகள் புரியும் லீலையின் அரசன்
அவதாரம் கொண்ட அற்புத நாதன்

அரி ஹரி என்று நாமங்கள் கொண்டு
அடியவர் மனதில் அமர்ந்தவன் நீயே

இந்திரன் அகந்தை அடக்கவே நீயும்
மலைதனைத் தூக்கி மக்களைக் காத்தாய்

காலிங்கன் தலையில் நர்த்தனம் செய்து
நாகத்தின் கொடுமை அழிந்திடச் செய்தாய்

பாற்கடல் மீது பள்ளி நீ கொண்டு
அதர்மத்தை அழிக்கும் விஷ்ணுவாய் நின்றாய்

## 02

## கண்ணா கண்ணா.....

கண்ணா கண்ணா ஓடிவா கண்ணா
மன்னா மன்னா ஆடிவா மன்னா

பத்தவதாரம் கொண்டபரந்தாமக் கண்ணா
பார்தன்னை காத்திடுவாய் பலராமக் கண்ணா

பாரதத்தின் தலைவனாக நின்றாயே கண்ணா
பார்த்தனுக்கு உபதேசம் செய்தாயே கண்ணா

கீதை தன்னை மக்களுக்காய் தந்தாயே கண்ணா
தர்மம் வெல்லும் என்ற உண்மை சொன்னாயே கண்ணா

கோகுலத்தின் பாலனாக நின்றாயே கண்ணா
கொடுமைகளை வென்று நீயும் நின்றாயே கண்ணா

பாற்கடலில் பள்ளி கொள்ளும் பச்சைமால் வண்ணா
பாவையர்கள் மனம்வருடும் கார்நிற வண்ணா

## கண்ணா கோபாலா......

கண்ணா கோபாலா எங்கள்
கண்ணா கோபாலா
காத்தருள வேண்டுகின்றோம்
கண்ணா கோபாலா

வெண்ணை உண்டவா எங்கள்
கண்ணா கோபாலா
வேண்டும் வரம் தந்தருளும்
கண்ணா கோபாலா

மண்ணை அளந்தவா எங்கள்
மாயக் கோபாலா
விண்ணை ஆழ்பவா
எங்கள் கண்ணா கோபாலா

கோதண்டம் ஏந்தியவா
கண்ணா கோபாலா
கொடுமைகளை அழித்திடுவாய்
கண்ணா கோபாலா

கல்லை முன்னாளில் பெண்ணாக்கி
வைத்தாய்
கல்லான மனங்களை நீ
கனியச் செய்யவா

அன்பென்னும் வெள்ளம்
ஆறாக ஓட
ஆசைக்கடல் தனையடைப்பாய்
கண்ணா கோபாலா


## மங்களம்

நாகசக்தி தேவிக்கு ஜெயமங்களம்
எங்கள் நாகலிங்க சுவாமிக்கு சுபமங்களம்

கொக்கட்டி நாதருக்கும் கோணமலைதேவருக்கும்
ஒற்றை மருப்புடைய ஓங்கார ரூபனுக்கும்

பாம்பணை தனிலுறையும் பச்சைமால் வண்ணனுக்கும்
பச்சைமயில் வாகனனாம் வள்ளி மணவாளனுக்கும்

சுப மங்களம்





## மகேந்திரன் கேதீஸ்வரன்

முனைக்காடு கிராமத்தில் பிறந்த மகேந்திரன் கேதீஸ்வரன் சிறுவயதில் இருந்து கலை, கவிதை போன்ற துறைகளில் ஆர்வம்கொண்டு தனது 14வயதிலே பாரம்பரிய கலையான கூத்துக்குள் நுழைந்து 11கூத்துக்களில் ஆடியதுடன், கூத்துக்களை பழக்கியும் கூத்துக்களை எழுதியும் அதுபோன்று வசந்தன், கும்மி, கரகம் போன்றவற்றினையும் சிறுவர்களைக்கொண்டு பழக்கியும் அரங்கேற்றியும் வருகின்றார். மேலும் சிறந்த குரல் வளம் கொண்ட இவர் பஜனை பாடல்களை பாடுவதிலும் ஆர்வம் செலுத்தி, சிறந்த கவிதை புனையும் ஆற்றலினையும் கொண்டு பஜனை பாமாலை எனும் புத்தகத்தினை வெளியிடுகின்றமை மிகவும் பாராட்டத்தக்கது.

மட்/முனைக்காடு விவேகானந்த வித்தியாலயத்தில் தரம் 11வரை கற்று பின் உயர்தரத்தினை மட்/முதலைக்குடா மகா வித்தியாலயத்திலும் கற்று சித்தியடைந்த இவர் தனது கலைமானி பட்டப்படிப்பினை 2015ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக நிறைவு செய்துள்ளார்.

மாகாண, மாவட்ட, பிரதேச ரீதியாக நடைபெற்ற கலைசார் போட்டிகளிலும் கலந்து வெற்றி பெற்றுள்ள இவரின் கலையின் செயற்பாட்டினை பாராட்டி 2014ம் மாவட்ட மக்கள் கலை இலக்கிய விழாவில் இளங்கலைஞர் விருதும், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தினால் இளங்கலைஞர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சிறுவயதில் இருந்து சமூகசேவையின்பால் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் கிராம, பிரதேச அமைப்புக்களிலும் அங்கம் வகித்து பல்வேறான சமூக செயற்பாடுகளையும் முன்னெடுத்துவருகின்றார்.

தனது முதல்முயற்சியாக வெளிவரும் பஜனை பாமாலை புத்தகத்தினை தொடர்ந்து இன்னும் பல்வேறு புத்தகங்களை வெளியிட வாழ்த்துக்களையும், என்றும் இறைவனது ஆசிகளும் தொடர்ந்து இருக்க வேண்டும் எனவும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

- வ.துசாந்தன் -